# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064852

1. District மாவட்டம்: VELLORE PS: காவல்நிலையம் VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE Year: ஆண்டு 2019 FIR No. மு.த.அ. எண் 15/2019 Date: நாள் 28.06.2019

2. (i) Act சட்டம்: PREVENTION OF CORRUPTION (AMENDMENT) ACT 2018. Sections பிரிவுகள்: 7 of P.C. (Amendment) Act 2018 r/w 102 Cr.p.c

(ii) Act சட்டம்: Cr.P.C. Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 27.6.19 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை Prior to 12.20 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.6.2019 Time நேரம் 11.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.06.2019 VOLUME-I Time நேரம் 12.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL TYPED COMPLAINT.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் EAST DIRECTION - 5 KMS

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி REGIONAL TRANSPORT OFFICE, SATHUVACHARI, VELLORE.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. JOTHI (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் SAMPATH

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 21.5.1965 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Dy. I.C.O, Vellore. (g) Address : முகவரி Dy. INSPECTION CELL OFFICER, DISTRICT INSPECTION CELL, VELLORE AND T.V. MALAI DISTRICT, VELLORE.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (1) Tr. N. RAMAKRISHNAN (49/19) s/o NATARAJAN, REGIONAL TRANSPORT OFFICER, VELLORE. (2) Tr. P. RAJASEKARAN (45/19) s/o PERIYANAN, MVI - Gr-I, O/o the R.T.O, VELLORE. (3) Tr. S.A. GNANAVEL (52/19) s/o ALAGARSAMY, MVI-Gr.II, O/o the RTO, VELLORE. (4) Tr. P. MURALI, 51/19 s/o PARASURAMAN, PERSONNAL ASSISTANT, O/o the R.T.O., VELLORE.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— NO-DELAY —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet Attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 28/6/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 28/06/19

15. Date & Time of despatch to the court: dt: 28.06.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. VIJAY,
Rank: நிலை Inspector of Police, Vigilance and Anti-Corruption, Vellore.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u> 28.06.2019-ஆம் தேதி 1700 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில், காவல் ஆய்வாளர் S.விஜய் ஆகிய நான் ஆஜரில் இருந்தபோது திரு.S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் அவர்கள், அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர்: S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம். பெறுநர்: துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, பொருள்: இருதுறை திடீர் சோதனை – வேலூர் மாவட்டம் - வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தது – நடவடிக்கை எடுத்தல் வேண்டி – புகார்மனு. 27.06.2019-ஆம் தேதியன்று காலை சுமார் 1100 மணிக்கு நான் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, வேலூர் மாவட்டம், வேலூர் மாநகரம் சத்துவாச்சாரி ஆர்.டி.ஓ. ஆபிஸ் ரோடில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன பதிவிற்காகவும், பெர்மிட்டிற்காகவும், ஓட்டுனர் பழகுனர் உரிமம், ஓட்டுனர் உரிமம், வாகன தகுதிச்சான்றிதழ் பெறுவதற்காகவும், ஓட்டுனர் மற்றும் நடத்துனர் உரிமம் புதுப்பிப்பதற்காகவும் வரும் பொது மக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக, வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக பணியாளர்கள் அனைவர்களுக்காகவும் மற்றும் தனித்தனியாக அவரவர் பதவிக்கு ஏற்பவும் அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காகவும் தனித்தனியாகவும் ஓட்டுனர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களிடமிருந்தும், இடைத்தரகர்கள் மூலமாகவும், பொது மக்களிடமிருந்து நேரடியாகவும் கையூட்டு பெறுவதாகவும், இடைத்தரகர்கள் பலரை அலுவலகத்திற்குள் அனுமதித்து அவர்கள் மூலமாகத்தான் பணிகளை செய்து கொடுப்பதாகவும் எனக்கு கிடைத்த நம்பகமான தகவலை, நான் என்னுடைய தகவலர்கள் மூலம் உறுதி செய்துகொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுக்கு தெரிவித்தும், அவர்களுடன் இணைந்து, 27.06.2019-ஆம் தேதியன்று பகல் 1220 மணிக்கு நான், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் அலுவலர்களுடன் இணைந்து மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த அலுவலகமானது வேலூர் சத்துவாச்சாரி பகுதி-2-ல் ஆர்.டி.ஓ. ஆபிஸ் ரோடின் இறுதியில், கிழக்கு புறமாக உள்ள அரசுக்கு சொந்தமான கட்டிட வளாகத்திற்குள் அமைந்துள்ளது. அந்த கட்டிடத்தின் தரைத்தளத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகமும், அதன் முதல் தளத்தில் துணை போக்குவரத்து ஆணையர்

அலுவலகமும் இயங்கி வருகிறது. திடீர் சோதனைக்கு முன்பு,வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.ராமகிருஷ்ணன் மற்றும் ஆஜரில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.ராஜசேகரன், திரு.ஞானவேல் மற்றும் பிற அலுவலர்கள், இடைத்தரகர்கள் மற்றும் பொது மக்கள் முன்பாக சோதனைக்கு சென்ற எங்களை நாங்கள் அறிமுகப்படுத்தி கொண்டு, அங்கிருந்த அனைவரிடமும் அவரவர் இடத்தில் அப்படியே இருக்கும்படி கேட்டுக்கொண்டு, சோதனைக்கு வந்த் எங்களை அவர் முன்பு சுயபரிசோதனைக்கு உட்படுத்தி, எங்களிடம் பணமோ அல்லது வேறு பொருளோ இல்லை என்பதை அவர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஆஜரில் இருந்த வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர்கள், அலுவலர்கள், இடைத்தரகர்கள் மற்றும் பொது மக்களை சோதனை செய்து, அவர்களால் தக்க முகாந்திரம் கூற இயலாத பணத்தை வழக்கின் நிமித்தம் கைப்பற்றியும், அவர்களில் சிலர் தாங்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதால் அந்த பணம் திருப்பி அவர்கள் வசம் கொடுக்கப்பட்டது. அதன் விவரம், வேலூர் துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நானும் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினரால், மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நேற்று 27.06.2019 பகல் 1220 மணி முதல் 2345 மணி வரை நடைபெற்ற திடீர் இருதுறை கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த செயல்முறையை இந்த புகார் மனுவுடன் நடவடிக்கைக்காக இணைத்துள்ளேன். இந்த திடீர் சோதனையின்போது வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை சேர்ந்த 1) திரு.N.ராமகிருஷ்ணன் (49/2019) த/பெ நடராஜன், வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர்-9, 2) திரு.ப.முரளி (51/2019) த/பெ பரசுராமன், வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 3) திரு.P.ராஜசேகரன் (45/2019), த/பெ பெரியண்ணன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 4) திரு.S.A.ஞானவேல் (52/2019), த/பெ அழகர்சாமி, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2, வட்டார போக்குவரத்து அலுவலகம், வாணியம்பாடி, அயல்பணி-வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 5) திருமதி.D.சுஜாதா (38/2019), க/பெ கிருஷ்ணகாந்த், கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர். 6) திரு.B.கதிர்வேல் (50/2019), த/பெ பாலகிருஷ்ணன், உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 7) திரு.P.புருஷோத்தமன், (41/2019), த/பெ பால்ராஜ், கணக்கர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 8) திரு.A.மனோ (28/2019), த/பெ அதியமான், உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 9)

திருமதி.M.கஸ்தூரி (31/2019), க/பெ குமரேசன், உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 10) திருமதி.A.சுமதி (54/2019), க/பெ சந்தானம், இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 11) செல்வி.J.ஜூடித் நர்கீஸ் நிக்கிலா (23/2019), த/பெ ஜான் புஷ்பராஜ், இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 12) திரு.V.ராஜமாணிக்கம் (47/2019), த/பெ வீரநாராயாணன், இளநிலை உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 13) திரு.M.லஷ்மணன் (31/2019), த/பெ மல்லன், தட்டச்சர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 14) திரு.G.ராஜவேலு (56/2019), த/பெ கோவிந்தசாமி, பதிவறை எழுத்தர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 15) திரு.A.ஜெய்சங்கர் (51/2019), த/பெ ஆறுமுகம், பதிவறை எழுத்தர், வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 16) திரு.E.B.முரளி செல்வம் (41/2019), த/பெ எத்திராஜன், புகைப்படம் எடுப்பவர் (Bonton Software Pvt.Ltd.), வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர், 17) திரு.A.நரேஷ் (26/2019), த/பெ அசோகன், Technical Consultant, Bonton Software Pvt.Ltd., வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர் 18) திரு.R.வினோத் குமார் (32/2019), த/பெ ராஜவேலு, Technical Consultant, Bonton Software Pvt.Ltd., வட்டார போக்குவரத்து அலுவலகம், வேலூர் ஆகியோர்களும், இடைத்தரகர்களும் மற்றும் பொது மக்களும் ஆஜரில் இருந்தனர். மேலும், வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் ஐந்து ஆவணங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.32,550/-, மாடி படிக்கட்டு, பிளாஸ்டிக் குப்பை தொட்டி மற்றும் கழிவறைகளுக்கு எதிரில் இருந்த UPS–களுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.50,000/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டு, ஆஜரில் இருந்தவர்களிடம் விசாரணை செய்ய, யாரும் அப்பணத்திற்கு உரிமை கோராததால் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின், “C” பிரிவுக்கான அறையில் யாரும் உரிமை கோராத கேட்பாரற்று கிடந்த பணம் ரூ.16,890/- விசாரணைக்கு பின்பு வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் சட்டத்திற்கும், விதிகளுக்கும் புறம்பாக ஆஜரில் இருந்த இடைத்தரகர்கள் மற்றும் ஓட்டுனர் பயிற்சி பள்ளிகளின் பணியாளர்கள் என்ற பெயரில் ஆஜரில் இருந்த இடைத்தரகர்கள் ஆகியோர்களிடமிருந்து விசாரணையின்போது, தக்க முகாந்திரம் மற்றும் விளக்கம் கூற முடியாமல் இருந்தவர்களிடம் இருந்து பணம் ரூ.62,220/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், சோதனையின்போது, வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ராமகிருஷ்ணன் அவர்கள் வசம் இருந்த பணம் ரூ.1,580/- மற்றும் திரு.ஞானவேல், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2 அவர்கள் வசம் இருந்த பணம் ரூ.550/- குறித்து விசாரிக்க, அவர்களால் தக்க முகாந்திரம் மற்றும்

விளக்கம் கொடுக்காத காரணத்தினால் அத்தொகை மொத்தம் ரூ.2,130/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலக திடீர் சோதனையில் யாரும் உரிமை கோராத மற்றும் தக்க முகாந்திரம் கூற இயலாத லஞ்சப்பணம் மொத்தம் ரூ.1,63,790/- வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ராமகிருஷ்ணன் அவர்களிடம், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் 1) வருகை பதிவேடு, 2) Bonton Software Pvt.Ltd. பணியாளர்களின் வருகை பதிவேடு, 3) கணினி நிரலர் வருகை பதிவேடு, 4) பணியாளர்கள் சிறுதொகை கையிருப்பு பதிவேடு, 5) இணக்க கட்டணம், சிறப்பு எண். வழங்குவது சம்மந்தமாகவும் வசூல் செய்யப்பட்ட தொகை விவரம் அடங்கிய தாள்கள், 6) கொடிநாள் வசூல் பதிவேடு ஆகியவை பார்வையிடப்பட்டு, அந்த பதிவேடுகளில் முதல் பக்கங்களிலும், பதிவுகள் செய்யப்பட்ட சம்மந்தப்பட்ட பக்கங்களிலும், நானும், வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர்கள், நேர்முக உதவியாளர் ஆகியோர் கையொப்பமிட்டு, வழக்கின் நிமித்தம் அந்த பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் இருதுறை கூட்டு சோதனை 27.06.2019 சுமார் 2345 மணிக்கு முடிக்கப்பட்டது. சோதனையின்போது, மேற்படி அலுவலகத்திலிருந்த பொருட்களுக்கும், ஆவணங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்கள், இடைத்தரகர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர்களுக்கு திடீர் சோதனையின்போது உடலளவிலும், மனதளவிலும் எவ்விதமான துன்புறுத்தலும் ஏற்படுத்தப்படவில்லை. பெண் ஊழியர்கள் காவல் ஆய்வாளர் திருமதி.S.விஜயலட்சுமி அவர்களால் திரேக சோதனைக்குட்படுத்தப்பட்டனர். மேலும், இந்த திடீர் இருதுறை கூட்டு சோதனையில் தக்க முகாந்திரம் கூற இயலாத மற்றும் யாரும் உரிமை கோராத பணம் ரூபாய்.1,63,790/-ஐ நான் எங்கள் அலுவலக பணப்பதிவேட்டில் பதிவு செய்து, இன்று 28.06.2019-ஆம் தேதியன்று மேற்படி பணம் ரூ.1,63,790/-, திடீர் இருதுறை கூட்டு சோதனையின் அசல் செயல்முறை மற்றும் கைப்பற்றப்பட்ட பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை புகாருடன் இணைத்துள்ளேன். வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் இடைத்தரகர்கள் மற்றும் ஓட்டுனர் பயிற்சி பள்ளி பணியாளர்கள் என்ற பெயரில் இடைத்தரகர்களை அனுமதித்தும், பொது மக்களுக்காக அவர்களின் தேவைக்கு சட்டப்படி செய்ய வேண்டிய பணிகளுக்காக இடைத்தரகர்கள் மூலமாக அரசால் நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு கூடுதலாக கணினி வழியிலான பணப்பரிவர்த்தனையை மீறி, லஞ்சமாக பணத்தை பெற்று, பொது மக்களை அலைக்கழித்து, சட்டப்படி செய்ய வேண்டிய பணிகளுக்காக கையூட்டு பெற்ற மற்றும் கையூட்டு பெற அனுமதித்த வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.ராமகிருஷ்ணன், மோட்டா வாகன ஆய்வாளர்கள்

திரு.ராஜசேகரன், திரு.ஞானவேல் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் திரு.முரளி ஆகியோர்கள் மீது வழக்கு பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் XXXX 28/6/19 S.ஜோதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்-9. இணைப்பு: மேற்சொன்னவாறு.

ஐயா,

இன்று 28.06.2019-ஆம் தேதி மாலை 1700 மணிக்கு மேற்படி புகார் மனுவினை பெற்று, வேலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.15/2019 u/s 7 ஊழல் தடுப்பு (திருத்தச் சட்டம்) 2018 r/w 102 Cr.P.C.படி வழக்கு பதிவு செய்து கொண்டேன். ஒப்பம் XXXX (S.Vijay) Inspr. of Police, V&AC, Vellore.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மற்றும் இரு துறை திடீர் கூட்டுசோதனையின் செயல்முறை ஆகியவற்றை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, வேலூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிக்கொள்ளப்பட்டது.

(S. Vijay), 28/06/19

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை,

வேலூர்.